**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| **Case No** | : CC No.**242/2023** | **Date** | : 24.06.2025 |
| **Deposition of Witness for** | : **அ.சா.5** | **Taluk** | : |
| **Name** | : P.செந்தில்குமார் | **Calling** | : |
| **Father Name** | : பழனிச்சாமி | **Religion** | : |
| **Village** | : | **Age** | : |

**Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 24.06.2025**

(5ம் எதிரி ஆஜர் . 1,2,3,4, எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகளின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.).

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>** :

1) நான் தற்போது கருங்கல்பாளையம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.12.2022ம் தேதி குடிமைப்பொருள் வழங்கல் குற்ற புலனாய்வுத்துறையில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது 27.12.2022ம் தேதி இரவு 21.00 மணியளவில் உதவி ஆய்வாளர் அவர்களுடன் நானும் என்னுடன் தலைமை காவலர் 2492 முருகன் ஆகியோருடன் அத்தியாவசிய பண்டங்கள் கடத்தல் மற்றும் பதுக்குதல் சம்பந்தமாக ரோந்து அலுவலாக தாளவாடி காவல் நிலைய காவல் ஆய்வாளர் செல்வம் , உதவி ஆய்வாளர் அர்த்தநாரீஷ்வரன், தனிப்பிரிவு தலைமை காவலர் 1922 மூர்த்தி ஆகியோருடன் கூட்டு ரோந்து அலுவலாக தாளவாடி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட மகாராஜன்புரம் சோதனை சாவடி அருகே வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது தாளவாடி நோக்கி வந்த ஸ்ரீமாரியம்மன் என்று எழுதப்பட்டிருந்த TN 29 AU 8839 என்ற ஈச்சர் வண்டியை சந்தேகத்தின் பேரில் தடுத்து நிறுத்திய போது அந்த வண்டியை அதன் ஓட்டுநர் சற்று தூரம் தள்ளி நிறுத்திவிட்டு அதில் இருந்து 3 நபர்கள் தப்பித்துச்செல்ல முற்பட்டவர்களை 2 நபர்களை மட்டும் பிடிக்க முடிந்தது, மற்றொரு நபர் இருட்டான பகுதிக்கு தப்பிச்சென்றுவிட்டார். பிடிபட்டவர்களை

விசாரிக்க அவர் பெயர்கள் ஜெயக்குமார், மனோஜ் என்று சொன்னார்கள். தப்பித்துச்சென்ற நபர்களை விசாரிக்க மாதேவா என்று சொன்னார்கள். மேற்படி ஈச்சர் வண்டியானது மாதேவா க்கு சொந்தமானது என்றும், அதில் தமிழக அரசால் வழங்கப்படும் இலவச பொதுவிநியோகத்திட்ட ரேசன் அரிசி 65 மூட்டைகளில் தலா 50 கிலோ வீதம் மொத்தம் 3250 கிலோ இருப்பதாகவும், மேற்படி அரிசியானது மாதேவா வுடன் வேலைபார்க்கும் குமாரும், அதே ஊரைச்சேர்ந்த சந்தோஷ் என்பவரும், தாளவாடி சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள பொதுமக்களிடம் குறைந்த விலைக்கு வாங்கி கர்நாடகாவிற்கு கடத்திச்சென்று கள்ள சந்தையில் விற்பனை செய்ய இருப்பதாகவும் சொன்னார்கள். மேற்படி வாகனத்தை சோதனை செய்தபோது அதில் 65 மூட்டைகளில் தலா 50கிலோ வீதம் மொத்தம் 3250கிலோ புழுங்கல் ரேசன் அரிசி இருந்தது.

2) மேற்படி எதிரிகள் இருவரையும் நீதிமன்ற நடைமுறைகள் பின்பற்றி கைது செய்வதற்காக காரணத்தை கூறி 27.12.2022ம் தேதி 21.30 மணிக்கு உதவி ஆய்வாளர் அவர்கள் கைது செய்தார். எதிரி ஜெயக்குமார் என்பவர் எந்தவித ஆசைவார்த்தையோ, அச்சுறுத்தலோ இல்லாமல் தானாக முன்வந்து சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர்கள் அவர்கள் மடிக்கணினியில் பதிவு செய்தார். அதில் நானும், தலைமைக் காவலர் முருகன் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது என்றும், **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** முதல் சாட்சி கையொப்பம் தலைமைக் காவலர் முருகன் என்பவருடையது ஆகும்.

3. பின்னர் எதிரி ஆஜர் செய்த பொது விநியோகத்திட்ட ரேசன் அரிசி 65 மூட்டைகளில் தலா 50 கிலோ வீதம் மொத்தம் 3250 கிலோ ரேசன் அரிசி மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்திய் ஈச்சர் வண்டி TN 29 AU 8839 ஆகியவற்றை பொது ஜனசாட்சிகள் யாரும் முன்வராததால் உடன் இருந்த போலீஸ்சாட்சிகளான எங்கள் முன்னிலையில் 27.12.2022ம் தேதி 22.30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். முதல் சாட்சி கையொப்பம் தலைமைக் காவலர்

முருகன் என்பவருடையது ஆகும். **(கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** . பின்னர் எதிரி மற்றும் சொத்துக்களுடன் மேற்படி நிலையம் வந்து 28.12.2022ம் தேதி 04.30 மணிக்கு நிலைய குற்ற எண்.280/2022 U/S 6(4) of TNSC (RDCS) order 1982 r/w 7(1) a (ii) of EC Act 1955 ன் படி வழக்கு பதிவு செய்தார். காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

1. கூட்டு ரோந்து செல்லும்போது எத்தனை நபர்கள் எந்தெந்த வாகனத்தில் சென்றோம் என்றால் நானும், முருகனும் ஒரு இருசக்கர வாகனத்தில் சென்றோம் மற்றவர்கள் எவ்வாறு வந்தார்கள் என்று தெரியவில்லை. வாகன தணிக்கை செய்ததாக சொல்லும் இடத்தில் வனத்துறையின் சோதனைச்சாவடி உள்ளது என்றால் சரிதான். ஒப்புதல வாக்குமூலத்தை எங்கு பிரிண்ட் எடுத்தோம் என்றால் தாளவாடி காவல்நிலையத்தில் வைத்து எடுத்தோம். நானும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் தாளவாடி காவல்நிலையத்தில் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம்.

2. மேற்படி வனத்துறையின் சோதனைச்சாவடியில் உள்ள நபர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றோமா என்றால் இல்லை. மேற்படி 65 மூட்டைகளின் சாக்குகள் எந்த வகையை சேர்ந்தது என்றால் பாலித்தீன் சாக்குகளாகும். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், என் முன்னிலையில் எதிரிகள் கைது செய்யப்படவில்லை என்றும், எதிரி ஜெயக்குமார் எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், அதில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றும், சம்பவ இடத்தில் சான்று பொருட்களான ஈச்சர் வண்டி மற்றும் பொது விநியோகத்திட்ட அரிசி கைப்பற்றபடவில்லை என்று சொன்னால் சரியல்ல. கைப்பற்றதல மகஜரில் நான் சம்பவ இடத்தில் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. புள்ளிவிவரத்திற்காக போடப்பட்ட வழக்கில் காவலநிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் கையொப்பம் செய்துவிட்டு ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்து தாளவாடி காவல்நிலையம் சென்று பிரதி எடுக்க

எவ்வளவு நேரம் ஆனது என்றால் சுமார் ஒரு மணிநேரம் ஆனது. தாளவாடியில் இருநது எங்கள் காவல்நிலையம் வர எவ்வளவு நேரம் ஆகியது என்றால் சுமார் 4 மணிநேரம் ஏற்பட்டது. நாங்கள் காவல்நிலையம் வரும்போது எவ்வளவு நேரம் இருக்கும் என்றால் அதிகாலை 04.00 மணி இருக்கும். தாளவாடியில் இருந்து நாங்களும், எதிரிகளும் எந்த வாகனத்தில் வந்தோம் என்றால் போலீஸ் ஜீப்பில் வந்தோம்.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

Judicial Magistrate No.III,
Erode.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| **Case No** | : CC No.**242/2023** | **Date** | : 24.06.2025 |
| **Deposition of Witness for** | : **அ.சா.4** | **Taluk** | : |
| **Name** | : P.முத்தமிழ்ச்செல்வன் | **Calling** | : |
| **Father Name** | : | **Religion** | : |
| **Village** | : | **Age** | : |

**Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 24.06.2025**

(5ம் எதிரி ஆஜர் . 1,2,3,4, எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர். எதிரிகளின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

**நான்** தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தில் தர ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.01.2023–ம் தேதி அன்று மண்டல அலுவலகத்தில் நான் பணியில் இருந்த போது, சேனாதிபதிபாளையம் கேர் குடோனில் இருந்து பகுப்பாய்விற்காக மாதிரி கொடுக்கப்பட்டது. அவை 19.01.2023 அன்று நான் பகுப்பாய்வு செய்த போது, அந்த அரிசியானது பொது விநியோகத்திட்டத்திற்கு உண்டான அரிசி என நானும், திரு.மனோகரன், துணை மேலாளர், தரக்கட்டுப்பாடு அவர்களும் சான்றளித்து கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் தரச்சான்றில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் மற்றொரு கையொப்பம் துணை மேலாளர்

திரு.மனோகரன் என்பவருடையதாகும். அது நாங்கள் வழங்கியதுதான். **(தரச்சான்று அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u> :–**

பொதுவாக அரிசியை இருப்பு வைத்தால் தரச்சான்றில் உள்ளது போன்று கலவைக் கூறுகள் வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. தரச்சான்றில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனத்தின் எண், அரிசிகளின் எடை, மூட்டைகளின் எண்ணிக்கை ஆகியவற்றை பற்றி எங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி அரிசியானது இரண்டு முறை வேகப்பட்டது என்று மேற்படி தரச்சான்றில் குறிப்பிடப்படவில்லை என்றால சரிதான். நான் தரசான்றிதழில் குறிப்பிட்டடுள்ள விவரங்களை மட்டும் வைத்து வழக்குச்சொத்து பொதுவிநியோகத்திட்ட அரிசி என்று சான்று அளிக்கமுடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள தேதி நேரத்தில் மாதிரியை பெறவில்லை என்றும், அதனை பகுப்பாய்வு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

Judicial Magistrate No.III,
Erode.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| **Case No** | : CC No. 349/2025 | **Date** | : 23.06.2025 |
| **Deposition of Witness for** | : **அ.சா.** | **Taluk** | : |
| **Name** | : **M**.கோவிந்தராஜ் | **Calling** | : |
| **Father Name** | : | **Religion** | : |
| **Village** | : | **Age** | : |

**Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 23.06.2025**

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

நான் தற்போது சித்தோடு காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். 29.03.2025ம் தேதி சித்தோடு காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் S. செந்தில்குமார் என்பவர் முதல் தகவல் அறிக்கை குற்ற எண் 151/2025 u/s. 331(3), 62 BNS வழக்கு பதிவு செய்து காவல் நிலையத்தில் பொதுமக்கள் ஆஜர் செய்த எதிரி பிரதாப் (எ) போர்மேன் பிரதாப் த/பெ. ராஜா, கிச்சிபாளையம் சேலம் மாவட்டம் என்பவர் மீது வழக்கு பதிவு செய்து புலன் விசாரணைக்கு முதல் தகவல் அறிக்கை ஒரு நகல் காவல் நிலையத்தில் என்னிடம் ஒப்படைத்தார். முதல் தகவல் அறிக்கையைப்பெற்றுக்கொண்டு சம்பவ இடத்திற்கு 29.03.2025ம் தேதி காலை 11.00 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டேன். சம்பவ இடத்திலிருந்த சாட்சி 1. A. கந்தமுரளி, 2. துளசிராஜன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்த்து மாதிரி வரைபடம்,பார்வை மகஜர் தயார் செய்தேன். **(பார்வை மகஜர் அ.சா.ஆ. ஆக குறியீடு செய்யப்படுகிறது, மாதிரி வரைபடம் அ.சா.ஆ. ஆக குறியீடு செய்யப்படுகிறது).** சம்பவ இடத்தில் மேற்படி சாட்சியிடம் பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றும் பின்னர் சாட்சிகள் 1. பழனிசாமி, 2. கந்தமுரளி, 3. துளசி ராஜன், 4.கண்ணபிரான், 5. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

சம்பவமானது சம்பவ இடத்தில் உள்ள கடையின் சட்டர் ஒரு பகுதி உடைத்து தூக்கிய நிலையில் இருந்ததால் மேற்படி எதிரியை பொதுமக்கள் ஆஜர் படுத்திய பிரதாப் (எ) போர்மேன் பிரதாப் என்பவரை சித்தோடு காவல் நிலையத்தில் வைத்து 13.00 மணிக்கு கைது செய்தேன். பின்னர் சாட்சிகள் 1.கண்ணபிரான், 2.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் எதிரி பிரதாப் (எ) போர்மேன் பிரதாப் என்பவரை எங்கள் முன்னிலையில் எந்தவிதமான அச்சுறுத்தலும் இல்லாமல் எதிரி தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 13.15 மணிக்கு பதிவு செய்தேன். பின்னர்புலன் விசாரணை முடித்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் புலன் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக இறுதி குற்ற அறிக்கையை கனம் நீதித்துறை நடுவர் எண் 3ல் தாக்கல் செய்தேன்.